

# ரூ.26 கோடி செலவில் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள்; தொழிலாளர் அலுவலக வளாகம்

## எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்

சென்னை, நவ.8–

**முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று (8–ந் தேதி) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம், சின்னசேலத்தில் 5 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திண்டிவனத்தில் 4 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள் மற்றும் பயிற்சியாளர் விடுதிக் கட்டிடங்களை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்.**

மேலும், 6 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள் மற்றும் 9 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விரும்பும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யவும், தொழில்திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், அரசின் சார்பில் தொழிற்பயிற்சி நிலையங்களை கூடுதலாக தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை துவக்குதல், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

### தொழிற்பயிற்சி நிலையங்கள்

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டம், சின்னசேலத்தில் 5 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திண்டிவனத்தில் 4 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள் மற்றும் பயிற்சியாளர் விடுதிக் கட்டடங்களை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்.

மேலும், நீலகிரி மாவட்டம், கூடலூரில் 2 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்பணியாள் மற்றும் பொருத்துநர் தொழிற்பிரிவுகளுக்கான வகுப்பறை மற்றும் பணிமனைக் கட்டடங்கள்,

கடலூர் மாவட்டம், கடலூர் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ் தொழிற்பிரிவிற்கான வகுப்பறை மற்றும் பணிமனைக் கட்டடங்கள், திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இயந்திர வேலையாள் தொழிற் பிரிவிற்கான வகுப்பறை மற்றும் பணிமனைக் கட்டடங்கள்,

வேலூர்மாவட்டம், ராணிப்பேட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆப்ரேட்டர் அட்வான்ஸ்டு மெஷின் டூல்ஸ் தொழிற்பிரிவிற்கான வகுப்பறை மற்றும் பணிமனைக் கட்டடங்கள், சேலம் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மெக்கானிக் ரெப்ரிஜிரேஷன் மற்றும் ஏசி மெக்கானிக் தொழிற்பிரிவிற்கான வகுப்பறை மற்றும் பணிமனைக் கட்டடங்கள்;

### தொழிலாளர் அலுவலக கட்டிடங்கள்

மேலும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியத்தின் சார்பில் வேலூர் மாவட்டம், வேலூர், மேல்மொணவூரில் 4 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணத்தில் 2 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை, பழனியப்பா நகரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகங்கள்;

எனமொத்தம் 25 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், தலைமைச் செயலாளர் க.சண்முகம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் முகமது நசிமுத்தின், தொழிலாளர் நல ஆணையர் டாக்டர் ஆர்.நந்தகோபால், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு) மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் வி. விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வைகை அணையிலிருந்து நாளை தண்ணீர் திறப்பு: எடப்பாடி பழனிசாமி உத்தரவு

## மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் 1 லட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி

சென்னை, நவ.8–

**வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு நாளை முதல் தண்ணீர் திறந்துவிட முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மதுரை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மதுரை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வைகை பூர்வீக பாசனப்பகுதி IIIக்கு 9–ந்தேதி முதல் 16–ந்தேதி வரை உள்ள



7 நாட்களுக்கு 1441 மில்லியன் கன அடியும், வைகை பூர்வீக பாசனப்பகுதி IIக்கு 17–ந்தேதி முதல் 21–ந்தேதி வரை 4 நாட்களுக்கு 386 மில்லியன் கன அடியும், 22–ந்தேதி முதல் 25–ந்தேதி வரை மூன்று நாட்களுக்கு 48 மி.க.அடியும் பகுதி–Iயை சார்ந்த நான்கு கண்மாய்களுக்கு, விரகனூர் மதகணையில் வழங்கவும் மற்றும் வைகை பூர்வீகபாசனப்பகுதி Iக்கு 26–ந்தேதி முதல் டிசம்பர் 2–ந்தேதி வரை 240 மில்லியன் கனஅடி தண்ணீரை வைகை அணையிலிருந்து திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

மதுரை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 1 லட்சத்து 36 ஆயிரத்து 109 ஏக்கர் நிலங்கள் நேரடி மற்றும் மறைமுக பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.


## ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**செப்டம்பர் 30, 2019 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

ரூ. லட்சத்தில் (EPS தவிர)

| வ.எண் | விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2019 (தணிக்கை செய்யப்படாதது) | முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2019 (தணிக்கை செய்யப்படாதது) | முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2018 (தணிக்கை செய்யப்படாதது) | முடிவடைந்த ஆறுமாதங்கள் செப்டம்பர் 30, 2019 (தணிக்கை செய்யப்படாதது) | முடிவடைந்த ஆறுமாதங்கள் செப்டம்பர் 30, 2018 (தணிக்கை செய்யப்படாதது) | முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2019 (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 17,523 | 18,472 | 17,159 | 35,995 | 34,728 | 68,835 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 2,238 | 2,561 | 2,104 | 4,799 | 4,477 | 8,482 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 2,238 | 2,561 | 2,104 | 4,799 | 4,409 | 8,414 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 1,885 | 1,673 | 1,429 | 3,558 | 2,968 | 5,759 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 1,873 | 1,664 | 1,440 | 3,537 | 2,989 | 5,721 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 |
| 7 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) அ) அடிப்படை | 12.25 | 10.87 | 9.28 | 23.12 | 19.28 | 37.41 |
| | ஆ) குறைமதிப்பு | 12.25 | 10.87 | 9.28 | 23.12 | 19.28 | 37.41 |

குறிப்பு:

1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செப்டம்பர் 30, 2019 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.
2. வரி விதிப்பு சட்டம் (திருத்தம்) அவசர சட்டம், 2019 ல் அறிமுகப்படுத்தப்பட்ட வருமானவரி சட்டம், 1961, பிரிவு 115BAA-வின் கீழ் அனுமதிக்கப்பட்ட விருப்பத் தேர்வை கம்பெனி பயன்படுத்தியுள்ளது. அதன் விளைவாக மார்ச் 31, 2019 அன்றுள்ளபடி ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு (நிகரம்) மற்றும் மார்ச் 31, 2020 அன்று முடிவடையும் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வரி செலவுகள் ஆகியவை மறு அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவான தாக்கம் தொகை ரூ. 248 லட்சங்கள் செப்டம்பர் 30, 2019 அன்று முடிவடைந்த நடப்புக் காலாண்டில் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக

சென்னை
நவம்பர் 7, 2019

Your Partner in Welding & Cutting
Visit our website : http://www.esabindia.com

**ரோஹித் கம்பீர்**
மேலாண்மை இயக்குனர்



**தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் முன்பாக, சென்னை**

கம்பெனி மனு எண். சிஏ 805/சிஏஏ/2019

கம்பெனிகள் சட்டம் 2013 விஷயத்தில்

மற்றும்

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவுகள் 230–232 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013ன் இதர பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மனு பற்றிய விஷயத்தில்

மற்றும்

அப்பல்லோ பார்மசிஸ் லிமிடெட்
(CIN:U52500TN2016PLC111328)
கம்பெனிகள் சட்டம் 2013ன் கீழ் இணைக்கப்பட்ட கம்பெனி
பதிவு அலுவலகம்: எண். 19. பிஷப் கார்டன்ஸ், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

மற்றும்

அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட் (டிரான்ஸ்பரர் கம்பெனி) மற்றும் அப்பல்லோ பார்மசிஸ் லிமிடெட் (டிரான்ஸ்பரீ கம்பெனி) மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடையே ஒப்பந்த திட்ட விஷயத்தில்

அப்பல்லோ பார்மசிஸ் லிமிடெட்
CIN:U52500TN2016PLC111328
கம்பெனிகள் சட்டம் 2013ன் கீழ்
இணைக்கப்பட்ட கம்பெனி
பதிவு அலுவலகம்: எண். 19. பிஷப் கார்டன்ஸ்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. தமிழ்நாடு

... மனுதாரர் கம்பெனி/டிரான்ஸ்பரீ கம்பெனி

**மனுவின் மீது விசாரணை பற்றிய அறிவிப்பு**

அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட் மற்றும் அப்பல்லோ பார்மசிஸ் லிமிடெட் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடையே ஒப்பந்த திட்டத்திற்கு அனுமதி கோர கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவுகள் 230–232ன் கீழ் மனு ஒன்று 28 ஆகஸ்ட் 2019 தேதியிட்ட ஆணையின்படி மனுதாரர் கம்பெனியால் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் சென்னை பெஞ்ச் ('என்சிஎல்டி') முன்பாக தாக்கல் செய்யப்பட்டது மற்றும் மேற்சொன்ன மனு தேசிய கம்பெனி சட்டத் தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு வருகிறது. எவருக்கேனும் மேற்சொன்ன மனுவை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ கருத்து இருப்பின் அது குறித்து அவரோ அல்லது அவரது வழக்கறிஞரோ பெயர் மற்றும் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்டு இந்த விளம்பர தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது கம்பெனிக்கு அனுப்ப வேண்டும். எவரேனும் மேற்சொன்ன மனுவை எதிர்ப்பதாக இருப்பின் எதிர்ப்பதற்கான காரணம் அல்லது அபிடவிட்டின் நகலை அந்த அறிவிப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒருவேளை எந்தவித ஆட்சேபம்/ பிரதிநிதித்துவம் வராதபட்சத்தில், மேற்சொன்ன மனுவிற்கு எதிராக எந்தவித ஆட்சேபம்/பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதப்படும்.

மனுவின் நகல் எவருக்கேனும் தேவைப்படின் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி கீழ்க்கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

சென்னையில் 7 நவம்பர், 2019 தேதியிடப்பட்டது.

**லட்சுமி சுப்ரமணியன்**
சீனியர் பார்ட்னர்
லட்சுமி சுப்ரமணியன் அண்ட் அசோசியேட்ஸ
81, எம்என்ஓ காம்ப்ளக்ஸ், கிரீம்ஸ் ரோடு, சென்னை 600 006
மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி

மனுதாரர் கம்பெனியை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
அப்பல்லோ பார்மசிஸ் லிமிடெட்
நிர்வாக அலுவலகம் – ஜி பிளாக், 3வது தளம் – அலி டவர்ஸ்,
எண். 55, கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை–600 006.



**தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் முன்பாக, சென்னை**

கம்பெனி மனு எண். எம்ஏ/949/2019

சிஏ 804/சிஏஏ/2019ல்

கம்பெனிகள் சட்டம் 2013 விஷயத்தில்

மற்றும்

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவுகள் 230–232 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013ன் இதர பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மனு பற்றிய விஷயத்தில்

மற்றும்

அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட்
(CIN: L85110TN1979PLC008035)
கம்பெனிகள் சட்டம் 1956ன் கீழ் இணைக்கப்பட்ட கம்பெனி
பதிவு அலுவலகம்: எண். 19. பிஷப் கார்டன்ஸ், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

மற்றும்

அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட் (டிரான்ஸ்பரர் கம்பெனி) மற்றும் அப்பல்லோ பார்மசிஸ் லிமிடெட் (டிரான்ஸ்பரீ கம்பெனி) மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் கிரிடிட்டார்களிடையே ஒப்பந்த திட்ட விஷயத்தில்

அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட்
CIN: L85110TN1979PLC008035
கம்பெனிகள் சட்டம் 1956ன் கீழ்
இணைக்கப்பட்ட கம்பெனி
பதிவு அலுவலகம்: எண். 19. பிஷப் கார்டன்ஸ்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. தமிழ்நாடு

... மனுதாரர் கம்பெனி/டிரான்ஸ்பரர் கம்பெனி

**மனுவின் மீது விசாரணை பற்றிய அறிவிப்பு**

அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட் மற்றும் அப்பல்லோ பார்மசிஸ் லிமிடெட் மற்றும் அதன் சம்பந்தப்பட்டபங்குதாரர்கள் மற்றும் கிரிடிட்டார்களிடையே ஒப்பந்த திட்டத்திற்கு அனுமதி கோர கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவுகள் 230–232ன் கீழ் மனு ஒன்று 28 ஆகஸ்ட் 2019 தேதியிட்ட ஆணையின்படி மனுதாரர் கம்பெனியால் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் சென்னை பெஞ்ச் ('என்சிஎல்டி') முன்பாக தாக்கல் செய்யப்பட்டது மற்றும் மேற்சொன்ன மனு தேசிய கம்பெனி சட்டத் தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு வருகிறது. எவருக்கேனும் மேற்சொன்ன மனுவை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ கருத்து இருப்பின் அது குறித்து அவரோ அல்லது அவரது வழக்கறிஞரோ பெயர் மற்றும் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்டு இந்த விளம்பர தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது கம்பெனிக்கு அனுப்ப வேண்டும். எவரேனும் மேற்சொன்ன மனுவை எதிர்ப்பதாக இருப்பின் எதிர்ப்பதற்கான காரணம் அல்லது அபிடவிட்டின் நகலை அந்த அறிவிப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒருவேளை எந்தவித ஆட்சேபம்/ பிரதிநிதித்துவம் வராதபட்சத்தில், மேற்சொன்ன மனுவிற்கு எதிராக எந்தவித ஆட்சேபம்/பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதப்படும்.

மனுவின் நகல் எவருக்கேனும் தேவைப்படின் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி கீழ்க்கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

சென்னையில் 7 நவம்பர், 2019 தேதியிடப்பட்டது.

**லட்சுமி சுப்ரமணியன்**
சீனியர் பார்ட்னர்
லட்சுமி சுப்ரமணியன் அண்ட் அசோசியேட்ஸ
81, எம்என்ஓ காம்ப்ளக்ஸ், கிரீம்ஸ் ரோடு, சென்னை 600 006
மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி

மனுதாரர் கம்பெனியை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
செயலக துறை: அலி டவர்ஸ்,
எண். 55, கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை–600 006.

Apollo HOSPITALS